சிவமயம்

gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ல் ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புக. ருஅ] யாழ்ப்பாணம்—வியஞ மாசி மீ ௨ (1947 பெப்ரவரி 18 செவ்வாய்க்கிழமை)[இல அஎ

## நமது சமயம்

(ருவ்பகதூர் எஸ். வையாபுரிப்பிள்ளை)

நமது சைவசமயம் பல பல நூற்றுண்டுகளாகக் காலநெறியோடு ஒத்தியங்கிச் சென்றது. கி.பி. முதல் நூற்றுண்டிலிருந்து இதன் வாழ்க்கை தமிழ் நாட்டில் அறியக் கிடக்கின்றது. தொடக்கத்தில் கிரியைகளின்றி வணக்க மாத்திரமாய் இது அமைந்திருந்தமை சங்க நூற்சான்றுகளால் அறியலாம். கி.பி. 5-ம் நூற்றுண்டிலிருந்து நமது சமயத்திற்கு ஒரு புது வாழ்க்கை ஏற்பட்டது, பக்தி நெறியானது தமிழ்நாட்டில் பெருக்கெடுத்துப் பரவியது. சைனம் முதலிய பிற சமயங்களோடு வாதிட்டு வெற்றிகொண்டது. பின் இராஜாங்க சமயமாக இது அமைந்தது அரசர்கள் கோயில்கள் எடுப்பித்துப் போற்றி வந்தனர். அப்பர், சம்பந்தர் சுந்தரர் முதலிய அருணெறிச் செல்வர்களுடைய திருப்பாடல் நமது சமயத்திற்குப் புத்துயிரளித்தது. இவர்கள் சைவசமயாசாரியர்கள் என்றே கொண்டாடப்பட்டனர். மணிவாசகப் பெருந்தகையாரது திருவாசகம் சைவ சமயத்தின் பெருமைக்கு வரம்பாக நின்றது. இங்ஙனமாகப் பக்திநெறியோடொத்து நமது சமயம் வளர்ந்து வரலாயிற்று. மக்கள் வாழ்க்கையின் உயிராடமைந்து அதற்கு இனிய பண்பு அளித்து, அதனை ஆற்றலுடையதாய்ச் செய்து வந்தது திடீரெனச் சண்டமாருதம் கிளம்பிற்று. தத்துவ விசாரணைகள் நாடெங்கும் நடைபெற்றன, மக்கள் உள்ளம் ஒருநிலைப்படாது தத்தளித்தது.

விரதமே பரமாக வேதியருஞ்
சரதமாகவே சாத்திரங் காட்டினர்
சமயவாதிகளும் தத்தம் மதங்களே
அமைவதாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயாவாத மென்னும்
சண்டமாருதஞ் சுழித்தடித் தா
அர்த்(து)

என்று திருவாசகத்தில் வரும் அடிகள் மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்ந்த காலத்தே நிகழ்ந்த தத்துவ விசாரணைச் சண்டமாருதத்தையே குறிக்கின்றன என்று கொள்ளலாம். ஸ்ரீ சங்கராச்சாரியரும் இக்காலத்தே வாழ்ந்து தமது வேதாந்த சூத்திர பாஷ்யத்தால் அத்வைத நிரணயம் செய்து வந்தனர். பல இடங்களுக்கும் சென்று மற்றைச் சமயவாதிகளோடு தர்க்கம் புரிந்தனர். மக்களது அடிப்படையுணர்ச்சியொன்றினின்று எழுந்த சமயமும் (Religion) தத்துவ சாஸ்திரத்தின் உதவியின்றித் தனித்து நிற்பது இயலாமற் போயிற்று. பக்திநெறி முதன்முதல் செழித்திருந்தகாலத்து வைதிக சமயம் அதன் வழிபட்டு விளங்கியது போலவே, இப்பொழுது பக்தியுடன் தத்துவ விசாரணைகளையும் தன்மேல் இட்டுக்கொண்டு புதிய சூழ்நிலைக்குத் தக்கவாறு தன்னை அமைத்துக் கொள்ள முயன்றது. இவ்வாறாக நமது சைவ சமயமும் தனது பூர்விகக் கொள்கைகளுக்கு ஏற்ப, ஒரு சில தத்துவக் கொள்கைகளை அனுசரித்து ஒழுகியது. சைவ சித்தாந்தம் இவ்வாறு தோன்றியதேயாகும். ஆகவே வேத புராணங்களின் வழியாகத் தோன்றி, மக்கள் உள்ளத்தில் பரந்து, பக்தி மார்க்கத்தில் ஒழுகி, தத்துவ சாஸ்திரத்தின் சார்பினாலே நமது சமயம் வாழ்ந்து வருவதாயிற்று. தத்துவ சாஸ்திரக் கொள்கைகள் சங்கரரின் அத்வைதக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டனவாய் ஆகமங்களின் வழிப்பட்டனவாய் அமைந்தன. இந்த உண்மையையே,

வேதம்பசு அதன்பால்மெய்யாகமம்
நால்வர்
ஓதும் தமிழ்அதனின் உள்ளுறு
நெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்
வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம,

என்ற வெண்பா ஒருவாறு உணர்த்துகிறது.

சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் பன்னிரண்டாம் நூற்றுண்டில் தோன்றிப் பின் பெருகலாயின. இவற்றின் உரைகள் தத்துவக் கருத்துக்களை நன்கு விளக்கிவந்தன. சைவ மடங்கள் சைவசமய பரிபாலனத்துக்கென்று ஏற்பட்டு, சைவசமயத்திற்கு ஊன்றுகோல்போல உதவி, சமய சாஸ்திரக் கல்வியைப் போற்றி வளர்த்துவரலாயின. அன்றியும் இம்மடங்கள் சைவ மக்களுக்குக் குருபீடங்களாக விளங்கி, அவர்களுக்குச் சமய உணர்ச்சியையும் சாஸ்திர உணர்ச்சியையும் பயில்வித்து வந்தன. பொதுமக்கள் புராணவாயிலாகச் சாஸ்திரக் கருத்துக்களை அறிந்து கொள்ளுதல் எளிது என்று கருதிச் சாஸ்திரம் அறிந்தகவிஞர்கள் புராணங்கள் இயற்றத் தொடங்கினார்கள். புராணங்களுள் முதன்மைபெற்று விளங்குவன பெரிய புராணம், கோயிற்புராணம் முதலியன. பக்தியும் சாஸ்திரக் கருத்தும் தமிழ் நாட்டிற் பரவுதற்குப் புராணங்களே பெருங் கருவிகளாக அமைந்துவிட்டன.

இப் புராணங்களும் சென்ற நூற்றுண்டின் இறுதியோடு முடிந்துவிட்டன என்றே கூறவேண்டும். இவற்றிலுள்ள கதைகளை வாசித்துப் பயன்பெறுவதில் தமிழ் மக்களுக்கு ஊக்கமின்றிப் போயிற்று இவற்றில் நம்பிக்கைதானும் இல்லையென்றுவிட்டது. மடங்களின் சைவ சமய பரிபாலன முயற்சியிலும் தளர்வுதோன்றத் தொடங்கிற்று. முதலில் அவற்றுக்கு இருந்த மகிமை சிறிது சிறிதாகக் குறைவுபடத் தலைப்பட்டது. சைவ சீலமும் ஒழுக்கமும் குன்றிவிட்டன. இக் காரணங்களால் சைவ சமயம் காலத்தின் வேகத்தோடு ஒத்தியங்கிச் செல்லாதபடி, ஒருபுறமாய் ஒதுக்கப்பட்டது நமது சைவசித்தாந்த சமாஜம் இந்நிலையை ஒருவாறு உணர்ந்து புது வழிகளில் முயன்று சைவ சமயத்தை இயக்குதற்கு முற்பட்டது.

சிறிது மிகைப்படச் சொல்லுதல் என்று சிலர்க்குத் தோன்றலாம். ஆனால் உண்மை அப்படியன்று. சைவ சமயத்தின் சரித்திரத்தைக்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## பொருள் விலை குறைய

### கட்டுப்பாடுகளை நீக்க ஆலோசனை

இன்று இந்த இலங்கையிலே வாழ்க்கைச் செலவு முன்னெருபோதும் இல்லாதவாறு அதிகரித்துவிட்டது. இதனைஎவ்வாறு குறைக்கலாம்என்று இலங்கை மந்திரிசபையினர் அரசாங்க நிதிப்பகுதியினரிடம் ஆலோசனை கேட்டனர்.

நிதிப்பகுதி உத்தியோகத்தர், இரண்டு ஆலோசனைகளைக் கூறுகிறார்கள் ஒன்று; அரசாங்கம்பொருள்கள்விலை அதிகரிக்காதபடி, குறைந்த விலைக்கு விற்கச்செய்தல். இப்படிச் செய்வதென்றால், அரசாங்கம் ஆண்டுதோறும் பெருந்தொகைப் பணம் நட்டம் இறுக்கவேண்டும். ஆகவே அந்த ஆலோசனையை அரசாங்கம் கைவிடவேண்டும். இரண்டாவது யோசனை என்னவென்றால், கட்டுப்பாடுகளை எடுக்கவேண்டும் என்பது. இப்போது அனுட்டானத்தில் இருக்கும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும் விலைக் கட்டுப்பாடுகளையும் தவிர்த்துவிட்டால், பொருள்களின் விலைகள் தானாகவே குறைந்துவிடும் என்று அதிகாரிகள் அபிப்பிராயப்பட்டு, இதனையே பலமாகச் சிபாரிசு செய்கிறார்கள்.

சிங்கப்பூரில் இதேபோல பொருள்களின் விலை கண்டபடி உயர்ந்திருந்தன, கட்டுப்பாடுகளை நீக்கியபின், இப்போது அவற்றின்விலை குறையத் தொடங்குகின்றன என்பதை நிதிப்பகுதி அதிகாரிகள் உதாரணமாக எடுத்துக்காட்டுகிறார்கள்.

கட்டுப்பாடுகளைத் தவிர்த்தவுடன் சில நாட்களுக்குப் பொருள்களின் விலை உயரும்தான். ஆனால் பின்னர் அவை குறைந்துவிடுமாம்.

நிதிப்பகுதி அதிகாரிகள் கூறியுள்ள இந்த ஆலோசனையை மந்திரசபையினர் அங்கீகரிக்கக்கூடும்.

## இந்திய நிலைமை

### இனி நடப்பது என்ன?

அரசியல் நிர்மாணசபையிற் பங்கு பற்றாமலிருக்கும்வரை, இடைக்கால அரசாங்கத்தில் இருப்பதற்கு முஸ்லீம்லீக்கிற்கு யோக்கியதையும் உரிமையும் இல்லை என்று காங்கிரஸ் இராஜப் பிரதிநிதியையும் இந்தியா மந்திரியையும் கேட்டுள்ளது. அக்கேள்விக்கு இன்னும் பதில் இல்லையாகவே, இவ்விஷயமாக உடன்பதில் தரவேண்டும் என்று பண்டித ஜவஹர்லால் நேரு இராஜப்பிரதிநிதி மூலமாக இந்தியா மந்திரியை மீண்டும் கேட்டிருக்கிறார், இன்னும் இரண்டொரு தினங்களில் இவ்விஷயமாகப் பாராளுமன்றத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் ஓர் அறிக்கை விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டிஷ் மந்திரிகளில் ஒருவர் கூடிய சீக்கிரம் இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்தியத் தலைவர்களுடன் இன்னும் மேற்கொண்டு பேச்சுக்கள் நிகழ்த்தலாம் என்றும் "ஹிந்துஸ்தான்ரைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது.

லண்டன் "ரைம்ஸ்" பத்திரிகைமுஸ்லிம்லீக்கின் விடாகண்டத்தனத்தைக் கண்டித்து ஓர் கட்டுரை வரைந்திருக்கிறது பிரிட்டிஷ் மந்திரிகள் திட்டத்தையும் அரசியல் நிர்மாணசபையையும் தாக்கி லீக் செய்துள்ள தீர்மானம் அதன் இராஜதந்திர ஞானசூன்யத்தைக் காட்டுகின்றதென்றும் இவ்விஷயத்தில் காங்கிரஸ் மனப்பூர்வமாகவும், ஹிருதயசுத்தியுடனும் நடக்கிறதென்றும் "ரைம்ஸ்" கூறுகிறது.

## ஒற்றுமையில்லை

பலகாலமாகச் சுகாதார சங்கப் பரிபாலனத்தில்இருந்தஊர்காவற்றுறையை நகர சங்கப்பரிபாலனத்திற்கு கொண்டுவர அரசாங்கம் நிச்சயித்தபின், வட்டார அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். நகர சங்கத் தலைவர் தெரிவு செய்யப்படுவதற்கு வடமாகாணத் தலைவர் இரண்டு முறை கூட்டங் கூட்டினார். ஆனால் கூட்டத்துக்கு மூன்று அங்கத்தவர்களே இரண்டு முறையும் சமுகமளித்தனர், அதனால் இதுவரை தலைவர் தெரிவு செய்யப்படவில்லை. ஸ்தல ஸ்தாபன உதவி அதிகாரியும் அங்கத்தவரிடையே சமரசம் உண்டாக்க முயற்சித்தும் பயனளிக்கவில்லை.

## கொழும்பு நகரசபையின் கேவலநிலை

கொழும்பு நகரசபையின் பணநிலைமை இப்போது மிகவும் கேவலமாக இருக்கிறது. வரிப்பணமாகக் கிடைக்கும் வருமானம் முழுவதும், சபையின் உத்தியோகத்தர்க்கு வேதனமாகக் கொடுக்கத்தான் போதுமானதாக இருக்கிறதாம் எனவே இந்த ஆண்டில் எவ்வகையான புதிய வேலைகளும் செய்யமுடியாதாம்.

## மலேயாவிலிருந்து 400 பேர்

சிங்கப்பூரிலிருந்து ஓர் கப்பல் சென்ற வெள்ளிக்கிழமை கொழும்புக்கு வந்தது. அதில் மலேயாவிலிருந்து 400 இலங்கையரும் வந்தனர்.

## பர்மா அரிசி

சென்ற வியாழக்கிழமை ஓர் கப்பல் 4,300 தொன் அரிசியுடன் பர்மாவிலிருந்து கொழும்புக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேஷ விஞ்ஞாபனம்

வருகிறவியாழக்கிழமை 20-2-47 மகாசிவராத்திரி விரத தீர்த்தம் பாரணமென்னுமிவற்றின்பொருட்டு இந்துசாதன ஆலயத்திலும், இச் சைவப்பிரகாச யந்திரசாலையிலும் கடமையாற்றுவோரனைவர்க்கும் விடுமுறை யளிக்கப்படுவதால், அடுத்ததினமாகிய வெள்ளிக்கிழமை இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவராவென்பதை அபிமானிகட்குத் தெரிவிக்கின்றேம்.

மனேஜர்.

THE SAIVAPRAKASA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹ
மாசிமீ சூ௨ செவ்வாய்க்கிழமை

## சமயநூற் கல்வி

III

சமயப்பற்று, சமய ஒழுக்கம், தெய்வத்தில் நம்பிக்கை முதலியவற்றோடு கூடிய உபாத்தியாயர்கள் தம் மாணக்கருக்குச் சமய நூல்களையும் ஒழுக்கங்களையும் ஊட்டுவதனலேயே சமய அறிவும் ஒழுக்கமும் நாளடைவில் விருத்தியுற்று வரும்; இப்படியான உணர்ச்சியுள்ள மக்கள் தீயன ஒழித்து நல்லன செய்யப் புகுதலினலே, ஊரில் பொய் களவு மதுபானம் கொலை தீய ஒழுக்கம் முதலிய பெரும்பாவங்கள் தேய்ந்துவிடத் தருமம்ஓங்கி வளரும்; சமயப்பற்றுள்ளவர்கள், புண்ணிய பாவம் சுவர்க்க நரகம் உண்டென்னுங் கொள்கை பூண்டவர்கள், அநீதிக்கு அஞ்சுவர், நீதியை விரும்புவர்; அல்லன அகற்றி நல்லன செய்வர்; இக்காரணங்கள் பற்றியே சமய நூலுணர்ச்சி வேணும், தெய்வ நம்பிக்கை வேணும், ஆலய வழிபாடு வேணும், அறஞ்செய்யவேணும், என்று பெரியோர் உபதேசித்து வருகிறார்கள். தெய்வத்தில் நம்பிக்கை யில்லாதவன், பாவபுண்ணிய முண்டென்று நம்பான்; சுவர்க்க நரகங்கள் உண்டென்பதை நம்பான்; உற்றார் உறவினர் அயலார் பிறர் எவரையும் நம்பான்; தன் மனைவி மக்களை நம்பான்; ஈற்றில் தன்னைத் தானே நம்பமாட்டான்; அவன் வாழ்க்கை ஈற்றில் அவநம்பிக்கையோடு முடியும்; ஆதலாற் சில பொருள்கள் உண்டென்பதை ஆசங்கையின்றி நம்ப வேண்டுமென்ற கொள்கை பெரியோரிடத்திலுமுண்டு.

> மந்திரமுந் தேவும் மருந்துங் குருவருளுந்
> தந்திரமும் ஞானந் தருமுறையும் — யந்திரமும்
> மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே மேதினியிற்
> பொய்யென்னிற் பொய்யாகிப் போம்,

எனப் பெரியோர் கூறியிருக்கின்றனர்.

தெய்வத்தில் நம்பிக்கை கொண்டுவிட்டால், அவனருளாலே அவன் தாள் வணங்கி ஈடேறுதல் இனிது முடியும். "உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்" என்றார் சங்கப்புலவருள் தலைமை வாய்ந்த நக்கீரர்; "ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" என்று இன்னெரு பெரியார் பணித்துள்ளார்; இந்த நம்பிக்கைகளுண்டாதற்குச் சைவப் பிள்ளைகள் சிறுவயசிற்றானே சைவ கலாசாலைகளிற் சமயப்பற்றுள்ள சமய நூலுணர்ச்சி யொழுக்கம் பூண்ட உபாத்தியாயர்களிடத்திற் படிக்க வேண்டுமென்கின்றேம்.

இனி, சமயப் பற்று, சமய நூலுணர்ச்சி, தெய்வபத்தி, ஒழுக்கம் முதலிய குணங்களுஞ் செயல்களுமில்லாத உபாத்தியாயர்கள் மாணக்கரா யுள்ளார்க்குச் சமயக்கல்வியூட்டத் துணிதல், தாசி யானவள் பெண்களின் கற்பிலக்கணத்தைப்பற்றி உபதேசிக்கத் தலைப்பட்டவாறாய் முடியும்; கலாசாலைகளில், விசேஷமாக ஆங்கில கலாசாலைகளில் ஒவ்வோர் துறையிற் பயின்று அறிவுபெற்ற ஆசிரியர்கள் பலர் படிப்பிக்கின்றார்கள்; ஆனல் இவர்கள் தமிழ் மொழியையேனும் சமய நூல்களையேனும் முறையாகக் கற்றிலாதவர்கள்; இவர்களிடத்திற் சமய அபிமானம் தெய்வ நம்பிக்கை யென்னு மிவைகள் இல்லையெனலாம்; இவர்கள் சைவக் கிரியைகளை அவமதிப்பர்; சமயவொழுக்கத்தைக் கடைப்பிடித்தொழுகுவோர்க்கு மௌட்டிகங் கற்பிப்பர்; சைவப் பெற்றோர்க்குப் பிள்ளைகளாகப் பிறந்தனரேயொழிய, சமய தீக்ஷை தானும் பெற்றறியார்; தாம் சமய விஷயமாக, தமிழ் விஷயமாக ஏதும் அறியாரெனினும் எல்லாம் அறிந்தார்போல் நடித்துக் குதர்க்கம் பேசுவர்; சமய சாஸ்திர உணர்ச்சி யுடையவர் தமிழ் நன்குணர்ந்தவர் தர்க்க சாத்திரமறிந்தவர்களாகிய பெரியோரைக் கண்டால் இவர்கள் மௌனஞ் சாதிப்பர்; இவர்கள் கலாசாலைகளில் ஆசிரியர்களாகக் கடமை பார்க்க நேருங் காலத்திலே, தங்களுக்குரிய அந்தத் துறைக்கல்வியையே பிள்ளைகட்குப் பயிற்றி விடுவதோடு மாத்திரம் அமைந்திருப்பரேல் அதனல்நன்மையுண்டாம்; தமிழ்மொழி விஷயத்திலும் சமய விஷயத்திலும் இவர்கள் தலையிடுவரேல், இவர்களிடத்துப்படிக்கும் மாணவர் விஷயத்தில் முந்தியுள்ள சமய நம்பிக்கையும் தமிழறிவும் விபரீதப்படுமெனல் தவறாகாது; இப்படியானோரிடத்துப் பிள்ளைகள் தமிழையும் சமய நூல்களையும் படித்தலைக் காட்டிலும் அவற்றை அறவே படியாதொழிதல் நன்றெனலாம். இவ்வாறான சில உபாத்தியாயர்கள் சமயத்தையே புதுப்பிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பேசக்கேட்டுள்ளேம்; சைவ வித்தியாசாலைகளை வைத்து நடத்தும் சபையார் சங்கத்தினர்களும், வித்தியாசாலை அதிபர்களும் இவர்கள் விஷயத்தில் அவதானமாக இருத்தல் வேண்டும்; சைவ வித்தியாசாலைகளிலொ[illegible] மிய கிறீஸ்தவ வித்தியாசாலைகளில்இப்படியான விபரீதக்கொள்கையுடைய ஆசிரியர்கள் யாதுஞ் செய்தல் முடியாதாம்.

இவை இங்ஙனமாக, இங்கு உள்ள சைவ வித்தியாசாலைகளிற் படிப்பிக்கப்படும் நூல்கள் சைவசித்தாந்த சமயத்தோடு முரண்படாதனவாகவே இருத்தல் வேண்டும்; சமய ஆரம்பக் கல்வி பயிலும் மாணக்கருககு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் எழுதிய முதலாம் இரண்டாஞ் சைவவினவிடைகள், நான்காம் பாலபாடம், பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சைவசமய நெறியுரை, திரு சு. சிவபாதசுந்தரமவர்கள் எழுதிய சைவபோதங்கள், அச்சுவேலி, சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் எழுதியுள்ள சைவ சமய வசன நூல்கள், இவற்றோடு மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் (வசனம்), இவைபோன்ற ஏனைய வசன நூல்கள் சமய அறிவின் பொருட்டுப் பயிற்றற்பாலன; சமய நூல்களை உபாத்தியாயர்கள் படிப்பிப்பதோடு அமையாது, சமய சம்பந்தமான விஷயங்களைப் பிள்ளைகட்குக்காலம் வாய்க்குந் தோறும் ஆர்வம் [illegible]க்கும் முறையிற் [illegible]கொடுத்தல் வேண்டும்.

# புரட்சி ஏற்படுமா?

## இந்திய அரங்கத்தில் அடுத்த ஆட்டம்

.... ஸ்ரீதரன் ...

நீண்டகாலத் திட்டத்தை ஏற்று அரசியல் நிர்மாணசபையிற் சேராத லீக்கர், இடைக்கால அரசாங்கத்தில் மந்திரிகளாக இருக்க உரிமையுடையர் அல்லர். எனவே அவர்களை அரசாங்கத்திலிருந்து நீக்கவேண்டும் என்று பண்டிதர் நேரு இந்தியா மந்திரிக்கு எழுதியுள்ளார். லீக்கரோ தாம் அப்படி நீண்டகாலத்தை ஏற்காமல் விடவில்லை, காங்கிரஸ்தான் நீண்டகாலத் திட்டத்தை முறைப்படி ஏற்காமல் வழவழா நியாயம் பேசி விதண்டாவாதம் புரிகிறது, இடைக்கால அரசாங்கத்தில் இருப்பதற்குக் காங்கிரசிற்குத்தான் யோக்கியதையில்லை என்று 'நியாயங்'காட்டி இந்தியா மந்திரிக்கு எழுதியிருக்கின்றனர். இருபக்க வாதங்களையும் பிரிட்டிஷ் மந்திரசபையினர் ஆராய்ந்து வருகின்றார்கள். இப்போது இங்கிலாந்திலே நிலக்கரி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி தீர்ந்தபின், இவ்விஷயம் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்படும். அநேகமாக இவ்விஷயமான ஓர் முடிவு அடுத்த வாரத்தில் வெளியிடப்படலாம் என்று கருதப்படுகிறது.

O

காங்கிரஸ்-முஸ்லிம்லீக் இப்படிப் பிணங்கிக்கொண்டிருப்பதால், பிரிட்டிஷ் அரசாங்கம் தனது பழைய திட்டத்தைக் கைவிடுத்து, ஓர்புதிய திட்டத்தை வகுத்து இந்திய அரசியலை நிர்மாணிக்கவேண்டும் என்று மான்செஸடர்கார்டியன்பத்திரிகை ஆலோசனை கூறுகிறது. இது ஓர்கண் துடைப்பு வித்தை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இன்னும் சிலகாலத்துக்குப் பாரதநாட்டில் நிலைநிறுத்தவே செய்யப்படும் சூழ்ச்சி இது. ஆனல் இந்தச் சூழ்ச்சியில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் ஈடுபடும் என்று நம்பமுடியாது. இப்போதுள்ள நிலையில் இந்தியாவில் முஸ்லிம்லீக்கை விட ஏனைய ஸ்தாபனங்கள் யாவும், சுதேச சமஸ்தானங்களும் காங்கிரசுடன் ஒத்துழைக்க முன்வந்திருக்கின்றன. இந்திய அரசியல் நிர்மாண விஷயத்தில், சிறுபான்மையினர் முட்டுக்கட்டை யிடுவரேயானல் அந்த முட்டுக்கட்டையைப் பொருட்படுத்தமாட்டோம் என்று பிரிட்டிஷ் பிரதமர் மிஸ்டர் அட்லி அன்று கூறியதை அவர்க்கும் பிரிட்டிஷ் மந்திரிகளுக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்டவேண்டியது ஆவசியகமாகின்றது. இப்படியாக முன்செய்த வாக்குறுதியைப் பிரிட்டிஷ் அரசாங்கம் மறந்து, இனியும் முஸலிம்லீக்கின் விடாகண்டச் செயலுக்குப் பணியுமேயானல், பாரதநாட்டில், பயங்கரமான அனர்த்தங்கள் நேரும் என்பதை ஈண்டுக் குறிப்பிடத் தேவையில்லை. கேவலம் 7 கோடி முஸல்மான்களும் அவர்களின் தலைவர் ஜின்னுவும் இவ்வளவு கருமங்கள் சாதிக்க முடியுமேயானல் 35 கோடி பாரதமக்கள் வீரத்தியாகிகளான நேரு, படேல் முதலாம் வீரர்கள் தலைமையில், எக்கருமங்களைச் சாதிக்கலாம் என்பதைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் இப்போதே உணர்ந்துகொள்ளுதல்நலம். ஏனெனவே, தேசிய இந்தியா கொதித்துக்கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் இனியும் தன் வழக்கமான குணத்தைக் காட்டி, பூனைக்குந் தோழன், பாலுக்குங் காவல் நியாயம் வழங்குமானல் கிளம்பப்போவது பயங்கரமான புரட்சிதான். அப்படி புரட்சி ஒன்று ஏற்படுமானல் அதுதான் ஏகாதிபத்தியம் என்னும் பிரேதப் பெட்டிக்கு வைக்கப்படும் கடைசி ஆணி என்பதனைச் சேர்ச்சில் கோஷ்டி உணரும் காலம் சமீபத்தில் வரவிருக்கிறது.

# உலக சமாதானம்!

## இந்தியாவின் பொறுப்பு

அமெரிக்காவுக்கு இந்திய ஸ்தானிகராகச் செல்லும் ஜனப் அஸாப் அலியைக் கௌரவிப்பதற்காகச் சென்ற சனிக்கிழமை லண்டனில் ஓர் விருந்துபசாரம நிகழ்ந்தது. பல பிரமுகர்கள் அதிற்சமுகமளித்தனர். பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரியான மிஸ்டர் எனெஸ்ற் பீவனும் ஆங்குச் சமுகமளித்து ஓர் பிரசாரணம் செய்தார். உலகசமாதானத்தை நிலைநாட்டுவதில் இந்தியாவே அதிகமாக வழிகாட்டவேண்டும் என்று அவர் கூறினர். மேலும் அவர் கூறியதாவது:

இந்தப் பெரிய உபகண்டமாகிய இந்தியா தன் சுதந்திரத்தை அடைந்து, அதனைப் பாதுகாக்கத் தனக்கு வல்லமை யுண்டென்பதை உலகிற்குக் காட்டவேண்டும் என்று விரும்புபவர்களில் யானும் ஒருவனுவேன். இதன் பொருட்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னலான முயற்சிகள் யாவற்றையும் செய்து வருகிறது.

இப்போது உலகின் ஒருபக்கத்தில் ரூஷிய ஏகாதிபத்தியக் கொள்கைகளும் மறுபக்கத்தில் அமெரிக்கப் பொருளாதிபத்தியக் கொள்கைகளும் இடைநடுவில் பிரிட்டிஷ் அரசாங்கமுமிருக்கின்றன. நாங்கள் முடிந்த இடங்களிலெல்லாம் சுதந்திரத்தை நிலைநாட்டி வருகிறோம். உலகில் உள்ள நாடுகள் மீண்டும் பயங்கரமான யுத்தத்தில் ஈடுபடுமா என்று நான் நினைப்பதுண்டு. இந்தப் பயங்கரமான நிலைமையைத் தீர்க்கும் சக்தி இந்தியாவிடம்தான் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் ஜனத்தலைவர் ஆவரா?

## லஞ்சம் கொடுக்கும் பதவிவேட்டுவர்

### அடுத்த மந்திரசபைக்கு ஆயத்தமா?

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் பலமாத காலங்கள் இருக்கின்றன. ஆனால் மிஸ்டர் சேனநாயக்கா இப்போதே, புதிய அரசியலின்படி அமைக்கப்படும் மந்திரசபையைப்பற்றி ஆலோசிக்கிறார் என்று விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள். எது எப்படியிருந்தபோதிலும் மிஸ்டர் சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக்கட்சியே அடுத்த அரசியலில் அதிகாரத்துக்கு வரும்; மிஸ்டர் சேனநாயக்காவே பிரதமமந்திரியாக வருவர் என்ற அபிப்பிராயம் இப்போது பொதுவாக மக்களிடையே வேரூன்றத் தொடங்கியிருக்கிறது. இதற்குக் காரணமும் உண்டு. மிஸ்டர் சேனநாயக்காவும் அவருடைய கோஷ்டியும் கடந்த 10 ஆண்டு காலமும் இந்நாட்டுக்கு எவ்விதமான நன்மைகளைச் செய்யாதபோதிலும், அரசாங்கசபையின் ஆயுள் முடியும் தருணத்தில் பல புரட்சிகரமான கருமங்களை ஆற்ற முன்வந்திருக்கிறார்கள். ஒரு கருமத்தைச் செய்யாமலிருப்பதைக்காட்டிலும், அக்கருமத்தைக் காலதாமதமாகச் செய்தல் நல்லதல்லவா?

●

**காரணம் என்ன?**

அரசாங்கசபையின் காலம் முடியவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், மிஸ்டர் சேனநாயக்கா திடீர்திடீரென்று பல புரட்சிகரமான கருமங்களை ஆற்றுவதன் காரணம் என்ன? அவருடைய நோக்கம் சமசமாஜிகள் புதிய அரசியலில் புகவொண்ணாது என்பதே. உலகம் போகிறபோக்கில், இந்த இலங்கையும் சமசமாஜிகள் கொள்கைகளை ஆதரித்து அவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவிட்டால் என் செய்வது. எனவே சமசமாஜிகளின் வேலைத்திட்டங்களை இப்போதே அமுலுக்குக்கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டால் தம் செல்வாக்கு அதிகப்படும் என்று மிஸ்டர் சேனநாயக்கா நன்கு உணர்ந்தே இந்தப் புரட்சிகரமான பல கருமங்களை ஆற்றத் துணிந்திருக்கிறார். இக்கருமங்களின் பயனாக, மிஸ்டர் சேனநாயக்கா தாம் இழந்த செல்வாக்கை ஓரளவுக்கு மீண்டும் பெற்றுவிட்டார் என்று கூறினும் பொருந்தும்,

●

**பதவி வகுப்பு**

அடுத்த அரசியலில் பிரதமமந்திரியாக மிஸ்டர் சேனநாயக்காதான் வருவர் என்றும், தமது ஏனைய மந்திரிகளாக யார்யாரைத் தெரிவு செய்யலாம் என்பதுபற்றி இப்போது யோசிக்கிறார் என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது. மிஸ்டர் பண்டாரநாயக்கா உதவிப் பிரதம மந்திரியாக வரலாம், மிஸ்டர் கொத்தலாவலை, அமரசூரியா, ஜே. ஆர். ஜெயவர்த்தனா என்னும் மூவரும் கட்டாயம் மந்திரிமார் சபையில் இடம்பெறுவர்; கீழ்ச்சபைத்தலைவராக மிஸ்டர் மொலமூரேயும், மேற்சபைத் தலைவராக சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமியும் வரவேண்டும் என்பதே மிஸ்டர் சேனநாயக்காவின் விருப்பம். இன்னும் இவ்விஷயமாகக் கொழும்பு டைம்ஸ பத்திரிகையின் அரசியல் நிருபர் கூறுகையில், ஸ்ரீ மகாதேவாவுக்கும் ஓர் மந்திரிப் பதவி கிடைக்கக் கூடும் என்கிறார்.

●

**நீதி மந்திரி**

பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ மகாதேவா யாழ்ப்பாணப் பட்டினத் தொகுதியில் அபேட்சகராக வர யோசிக்கிறார். அவர்க்கு எதிராக ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் நிற்பர்; இந்த எதிரிடையில் தமக்கு வெற்றி கிடைக்கும் என்று நிச்சயம் இல்லாவிட்டால் ஸ்ரீ மகாதேவா தேர்தலில் போட்டியிடாது "செனேற்" என்னும் மேற்சபைக்கு நியமிக்கப்படுவர். பின் அதிலிருந்து மிஸ்டர் சேனநாயக்காவினால் மந்திரசபையில் நியமிக்கப்படுவர். அநேகமாக ஸ்ரீ மகாதேவாவுக்கு நீதி மந்திரி ஸ்தானம் வழங்கப்படுமாம், "செனேற்" சபைக்கு யார்யார் நியமிக்கப்படுவர் என்ற பிரச்சினையும் இப்போது பலமாக இருக்கிறது. இப்போது சுப்ரீம் கோட்டில் நீதியரசராக உள்ள சேர் பிரான்சிஸ் சூட்ஸ், சேர். ஜெறாட் விஜயக்கூன், சேர், எர்னெஸ்ற் டீ சில்வா, சேர். மக்கான் மாக்காயர் முதலிய தென்னிலங்கைப் பிரமுகர் பெயர்களும், வடபாகத்திலிருந்து ஸ்ரீமான்கள் ஆர். ஆர் நல்லையா, டீ. ஸி, இராஜரத்தினம் என்பவர்கள் பெயர்களும் இவ்விஷயமாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

●

**லஞ்சம் கொடுத்தாராம்!**

இற்றைக்குச்சின்னாட்களுக்குமுன் நிகழ்ந்த கொழும்பு நகரசபை மேயர் தேர்தலில், பலவிதமான அருவருப்பான ஆபாசங்கள் நிகழ்ந்தன என்று சொல்லப்படுகிறது. இத்தேர்தலில் பல அங்கத்தவர்களுக்குக் கைலஞ்சம் கொடுக்க முயற்சி செய்யப்பட்டதென்றும், சிலர்க்கு உண்மையாகவே ஆயிரக்கணக்கில் லஞ்சங் கொடுக்கப்பட்டதென்றும், சென்ற புதன்கிழமை நிகழ்ந்த ஷை சபைக் கூட்டத்தில் மிஸ்டர் பீ. ஜீவேந்திரசிங்ஹ என்ற ஓர் அங்கத்தவரால் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கைலஞ்ச ஆபாசத்தைப்பற்றி விசாரணைபுரிந்து, ஓர் அறிக்கைவிட தேசாதிபதி ஓர் விசாரணைச் சபையை நியமிக்கவேண்டும் என்று மிஸ்டர் ஜீவேந்திரசிங்ஹ ஓர் தீர்மானத்தை எடுத்தாண்டு அதனை நிறைவேற்றுவித்தார். அத்தீர்மானத்தை எடுத்தாளும்போது மிஸ்டர் ஜீவேந்திரசிங்ஹ, மேயராக வர அபேட்சித்த ஒருவர் சார்பாகத் தமக்கு 10 000 ரூபா லஞ்சம் தர ஒருவர் முன்வந்தாரென்றும், இப்படியே பல அங்கத்தவர்களுக்கும் லஞ்சம் அளிக்க முயற்சிக்கப்பட்டதென்றும் கூறினார். இன்னும் மேயர் தெரிவில் நிகழ்ந்த பல ஆபாசங்கள் சம்பந்தமாகத் தம்மிடம் தக்க சாட்சியங்கள் உண்டு என்றும் குறிப்பிட்டார். நகரசபையில் உள்ள மூன்று அங்கத்தவர்களுக்குத் தனித்தனி 5000 ரூபா கொடுக்கப்பட்டதற்குத் தம்மிடம் சாட்சியம் இருப்பதாகவும் கூறினார். மேயர் தெரிவுக்காலத்தில் ஓர் அங்கத்தவர் இன்னொரு அங்கத்தவரை நோக்கி, "இந்தச்சமயத்தில் பணம் சம்பாதிக்காவிட்டால், வேறெப்போது சம்பாதிக்கப்போகிறீர்? நீர் லஞ்சம் பெறாவிட்டால் உம்மைப்போல முட்டாளவேறெவனுமில்லை. எனக்கு ஆர் 5000 ரூபா தருவரோ அவருக்கே நான் சம்மதம் கொடுப்பேன்" என்றாராம், மேயராக வர அபேட்சித்த ஒருவர், ஓர் அங்கத்தவர்க்கு மோட்டார்காம் ஒன்றும், 5000 ரூபாவும் கொடுப்பதாக வாக்களித்தாராம்; உதவி மேயராக வர அபேட்சித்த ஒருவர்; ஓர் அங்கத்தவர்க்கு 1000 ரூபா ரொக்கமும் ஓர் பெட்டி விஸ்கியும் கொடுப்பதாக வாக்களித்தாராம். இந்த விபரங்களையெல்லாம் மிஸ்டர் ஜீவேந்திரசிங்க எடுத்துரைத்தார். அவருடைய தீர்மானம் நிறைவேறிவிட்டது ஆனால் விசாரணைச் சபையினால் ஏதும் பயன் கிடைக்குமோ என்பது சந்தேகமே.

●

**வேலியே பயிரை மேய்தல்**

தேசபரிபாலனத்தை நடத்த, ஜனசமூக சேவைசெய்ய முன்வரும் தலைவர்களோ, லஞ்சம் முதலாம் தீயபழக்கங்களில் ஈடுபட்டு தம் மானத்தை விற்று சுய மரியாதையற்று பட்டவேட்டையில் ஈடுபடுவாரானால் பொதுஜனங்கள் எவ்வாறு நல்லொழுக்கமுடையராக வரமுடியும்? நகரசபையிற் சரி, பாராளுமன்றத்திற் சரி அங்கத்தவராக வர விரும்புவோர் தமது லட்சியத்தை ஓர்போதும் கைவிடலாகாது. கூடா முறைகளினால் வாக்காளரை ஏமாற்ற நினைப்பதும், ஏமாற்றுவதும் ஓர் பாவச் செயலாகும். ஆனால் இதனை உணரும் நல்லகுணம் இக்காலத்தில் தலைவர்களெனப் புறப்படுவோர்க்கு இல்லை. லஞ்சம் வெருட்டு என்பனவே இவர்கள் கைக்கொள்ளும் ஆயுதங்களாம் இவர்கள் தம் கொள்கைகளைப் பகிரங்கக் கூட்டத்தின் மூலமாயேனும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாயேனும் பொதுஜனங்களுக்கு அறிவித்துவிட்டு வாளாவிருத்தல்வேண்டும். வீட்டுக்கு வீடு, படலைக்குப்படலை திறந்து, பல்லெல்லாம் இரக்கக் காட்டி, பருவரல் முகத்தில்காட்டி, சொல்லெல்லாம் சொல்லி நாட்டி, துணைக்கரம் விரித்து நீட்டி இரக்கும் அபேட்சகர் எவராயினும் சரி, அவர் தலைவர்ப் பதவிக்கு யோக்கியமுடையவர் அல்லர் என்பதே நாம் கூறக்கூடியது.

# ஐ. தே. கட்சியின் ஆயத்தம்

## தேர்தற் சபை நியமனம்

ஐக்கிய தேசியக் கட்சியின் நிருவாகசபைக் கூட்டம் ஒன்று சென்ற சனிக்கிழமை கொழும்பிற் கூடி, வருகிற பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகர்களைத் தெரிவதற்கான ஓர் உபசபையைத் தெரிந்துள்ளது. அந்த உபசபையிற் 12 அங்கத்தவர்கள் இருப்பர். அவ்வங்கத்தவர்கள் பின்வருவோராவர்.

மிஸ்டர் டி. எஸ். சேனநாயக்கா, மிஸ்டர் ஜே. எல். கொத்தலாவலை, மிஸ்டர் பண்டாரநாயக்கா, மிஸ்டர் ஜோர்ஜ் ஈ. டி. சில்வா, ஸ்ரீ அ. மகாதேவா, மிஸ்டர் எச், டபிள்யூ அமரசூரியா, மிஸ்டர் ஜே. ஆர் ஜெயவர்த்தனா, மிஸ்டர் ஏ. ஆர். ஏ. றஸீக் ரீ. பீ. ஜயா, ஸ்ரீ க. பொன்னம்பலம், ஏ. எப். மொலமூரே, மிஸ்டர் ஏ. திசநாயக்கா.

கட்சியின் நிதி மிகவும் திருப்திகரமான நிலைமையில் இருக்கிறதென்றும், 20 பேர் தனித்தனி 5000 ரூபா தர ஒப்புக்கொண்டுவிட்டனர் என்றும் இன்னும் நாலுலட்சம் ரூபா கூடிய சீக்கிரத்திற் சேர்ந்துவிடும் என்றும் மிஸ்டர் பண்டாரநாயக்கா அறிவித்தார்.

சமதர்மிகள், ஐக்கிய தேசியக்கட்சியில் அங்கத்துவம் விரும்பி மனுச் செய்தனரோ என்று சிலர் மிஸ்டர் சேனநாயக்காவைக் கேட்டனர். சமதர்மிகள் ஐக்கியதேசியக்கட்சியுடன் ஒத்துழைக்கப் போவதாகப் பத்திரிகைகளிற் படித்ததைத் தவிரத் தான் வேறொன்றும் அறியமாட்டார் என்று மிஸ்டர் சேனநாயக்கா பதில் இறுத்தார்.

# எங்கள் ரேடியோ

## அதன் எதிர்காலம்

(ஸ்ரீ க. கனகரத்தினம்)

இலங்கையின் ஒரேயொரு ரேடியோ நிலையமாகக் கோழும்பில் உள்ள ஸ்தாபனத்திலிருந்து வெளிவரும் நிகழ்ச்சிகள் சாரமற்றவை என்ற முறைப்பாட்டுக்கிணங்க. அரசாங்கம், இந்நிலையத்தைப் புநருத்தாரணம் செய்ய முன்வந்திருக்கிறது. தமிழ் நிகழ்ச்சிகள் விஷயமாக, ஓர் ஆலோசனைச் சபையையும் நியமித்திருக்கிறது. இச்சபைக்கு கணக்குப் பரிசோதனை அதிகாரியாயிருந்த ஸ்ரீ க. கனகரத்தினம் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ரேடியோத் தமிழ் நிகழ்ச்சிகளை எவ்வாறு, ரசிகர்களுக்கேற்ற முறையில் அமைக்கலாம என்பதுபற்றி ஸ்ரீ கனகரத்தினம் தாம் செய்யும் முயற்சிகளை இந்த ரேடியோப் பேச்சின்மூலம் விளக்குகிறார்.

(முற்றொடர்)

பத்து வருஷங்களின் முன்னர் இருந்த நிலைமையைப் பார்ப்போம். அப்போது மொத்தம் லைசென்ஸ்பெற்றவர் தொகை 4500. இதில் ஐரோப்பியரும் பறங்கியரும் சேர்ந்து 2000 பேர். சிங்களவர் 1500 பேர், தமிழர் 450. முஸ்லிம்கள் 350. அந்தக் காலத்தில் ரேடியோ லைசென்ஸ் பெற்றவர்களின் சுவையும் தேவையும் என்னவாயிருந்தது என்பதையறிய ஒரு கேள்விப்பத்திரம் வெளியிடப்பட்டது. அதற்கு நாம் சொன்ன மொத்தம் 4500 பேரில் 3500 பேர் பதில் தெரிவித்தனர், அது பின் வருமாறு ஐரோப்பிய சங்கீதம் விரும்பினோர் 2305 பேர். சிங்கள சங்கீதத்தை விரும்பினவர்கள் 559 பேர். தமிழ் சங்கீதம் விரும்பினோர் 222 பேர். ஹிந்துஸ்தானி விரும்பினோர் 375 இந்தப் புள்ளிவிபரத்திலிருந்து ஒரு முக்கியமான உண்மை புலனாகிறது. அதாவது, தமிழர்களாயுள்ளோர் எல்லாரும் தமிழ் நிகழ்ச்சிகளை விரும்புவார்கள் என்று சொல்ல முடியாது. அதேபோல, சிங்களவர்களாயுள்ளவர்கள் எல்லாரும் சிங்களத்தை விரும்புவார்கள் என்றும் சொல்ல முடியாது. ரேடியோ லைசென்ஸ் பெற்ற தமிழர் 450 பேர் இருந்தும் அதில் 222 பேர்தான் தமிழ் சங்கீதத்தை விரும்பினார்கள். 1500 சிங்களவர்களில் சிங்கள சங்கீதத்தை விரும்பினோர் ஆக 559 பேர்தான். ஆகவே, மேல்நாட்டு நாகரிக வாழ்க்

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

## புதன் பிப்ரவரி 19

காலை 7-15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 திருவாலி ஆர் எஸ் மணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வானொலி வாத்யகோஷ்டி பாட்டு 8.30 எஸ் டி ராஜப்பா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் டி ராஜப்பா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 எஸ் டி ராஜப்பா பாட்டு, 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5: திருவாலி ஆர் என் மணி பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் கே தியாகராஜ பாகவதர் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 8 குரல்வகை இசைத்தட்டு 8-15 மதராசில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஐரோப்பிய சங்கீதம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கிலப் பேச்சு 10-30 முடிவு.

## வியாழன் பிப்ரவரி 20

காலை: 7-15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஆர் ஷண்முகசுந்தரர் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 8-30 வேதாரண்யம் எம் வி ஸ்ரீனிவாசன் பாட்டு 9 முடிவு,

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே நடராஜன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கே நடராசன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 வேதாரண்யம் எம் வி ஸ்ரீனிவாசன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்தானம் 7.15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 நாகம்மா, கமலா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 திரைமறைவில் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆர் ஷண்முகசுந்தரம் வீணை, 10-30 முடிவு.

## வெள்ளி பிப்ரவரி 21

காலை 7-15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் எஸ் கல்யாணசுந்தர தேசிகர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 நெடுந்தெரு ஆர் சடகோபாச்சாரி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வி என் பாலசுப்ரமணியம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 வி என் பாலசுப்ரமணியம் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 வி என் பாலசுப்ரமணியம் பாட்டு 5.40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 தர்மபுரம் எஸ் அபிராமிசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 விளக்கவுரை 8 எஸ் என் கல்யாணசுந்தர தேசிகர் பாட்டு 8-30 தர்மபுரம் எஸ் அபிராமசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 திரு குரலிசை 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஆங்கிலப் பேச்சு 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு,

## சனி பிப்ரவரி 22

காலை 71-5 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி தக்ஷிணாமூர்த்தி ஐயரின் 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8-15 வி நடராஜன் பாட்டு 8-30 காலை இசை 9 முடிவு.

1 பி தக்ஷிணாமூர்த்தி ஐயரின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-0 ஆங்கிலப் பேச்சு 2-15 வி நடராஜன் பாட்டு 2-45 முடிவு.

மாலை 5: திருச்சூர் எம் லக்ஷ்மி பாட்டு 5-40 திருமொழி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருச்சூர் எம் லக்ஷ்மி பாட்டு 7-15 ராஜ வைத்யநாத ... முதியோருக்கு வசதிகள் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வீணை பாட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 பியானோ, கிளாரினெட் 10 இசைவேளை 10.30 முடிவு,

### விளம்பரம்

வலிகாமம் வடக்கு கிழக்கு விளைபொருள் விற்பனை ஐக்கிய சங்கத்துக்கு இருபதினாயிரம் (20 000) சாக்கு தேவை. ஒரு அந்தர் வெண்காயம் கொள்ளக்கூடிய மா சாக்கு அல்லாததும் அண்டை இல்லாததுமாக இருக்கவேண்டும். இத்தொகையை சுண்ணாகம் கந்தோரில் கொடுக்கக் கூடியவர்கள் கொடுக்கக்கூடிய விலை வீதத்தையும் தமது பெயரையும் அறிவித்துத் தேவையான விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்து கொள்ளவும். இது விடையமாக மனுப்பண்ணுவோர் இம்மாதம் 27-ம் திகதிக்குமுன் (27-2-47) காரியதரிசிக்கு அனுப்பவும்.

நா. சிதம்பரநாதர்
காரியதரிசி.

சுண்ணாகம்
13—2—47.

Mis 325 18.2-47

## ஞாயிறு பிப்ரவரி 23

காலை: 7-15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 திருவிழந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 கிளாரினெட் இசை 8.30 திருவாரூர் பி ஆர் திலகம் பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் 12.30 நாகரிகப் பூலகணியில் 12.40 முதல் துபரம் 12.45 திருடன் சிறுகதை 12.55 வஸந்தசேனை நாட்டிய சங்கீதம் 1 மணிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எச் எஸ் மக்கரைச்சார் கோட்டுவாத்தியம் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2.30 நீங்கள்கேட்டவை 3 முடிவு.

மாலை 5 கே எல் ரங்கதாஸ் புல்லாங்குழல் 5-40 தேவாரதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவாரூர் பி ஆர் திலகம் பாட்டு 7.30 தமிழில் செய்திகள் 7.45 பிரசங்க விமர்சனம் 8 திருவிழந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 8.30 கே எல் ரங்கதாஸ் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 திருப்புகள் 10 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.

## திங்கள் பிப்ரவரி 24

காலை 7-15 கிராரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருநெல்வேலி பி நடராஜ சுந்தரம் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 பதிய பாடல்கள் 8 30 டி ஆர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஏ ஸ்ரீனிவாசராகவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 ஏ ஸ்ரீனிவாசராகவன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு,

மாலை 5 திருநெல்வேலி பி நடராஜசுந்தரம் நாகஸ்வரம் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 ஜி. அம்புஜவல்லி பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 55 நகர சேவைகள் 8 டி கிருஷ்ண மூர்த்தி ஐயரின் 8 30 ஜி அம்புஜவல்லி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 தந்தி இசை 10 இசைவேளை 10-30 முடிவு.

## செவ்வாய் பிப்ரவரி 25

காலை 7 15 கிராரம்பம் 720 தமிழில் செய்திகள் 7 30 சிதம்பரலிங்கம்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 எம் எஸ் சுப்புலட்சுமி இசைத்தட்டு 8.30 திருக்கண்ணபுரம் எஸ் சிறீனிவாசபிள்ளை புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 திருக்கண்ணபுரம் எஸ் சிறீனிவாசபிள்ளை புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு,

5 வி சங்கரலிங்கம்பிள்ளை பாட்டு 5 40 இசைப்பயிற்சி 5 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவாசகம் 7-15 புதிய வெளியீடுகள் இசைத்தட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 மன்னார்குடி ராசகோபால்பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சுதிராய், கமால் தாஸ் குப்தா 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ... 10 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.

# எங்கள் ரேடியோ

3-ம் பக்கத் தொடர்ச்சி

கையும், கலாசாரமும், பழக்கவழக்கமும் கைவந்த தமிழ் சிங்கள மக்கள் தம் சொந்த சங்கீதத்தை விரும்பாது மேல்நாட்டுச் சங்கீதத்தை விரும்பியதில் ஆச்சரிய மொன்றுமில்லை.

இன்றைய நிலைமையையும் பார்ப்போம். இன்று இலங்கையில் ரேடியோ லைசென்ஸ் பெற்றுள்ளவர்கள் தொகை ஏறக்குறைய 14,700. இதில் தமிழரும் முஸ்லிம்களும் சேர்ந்த தொகை 3325. இது மொத்தத்தில் நூற்றுக்கு 22 வீதம். அதாவது, கால்வாசியிலும் குறைவானது, இதிலும், தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்காது ஆங்கில சங்கீதத்தையும் நிகழ்ச்சிகளையும் கேட்பவர்கள் தொகையைக் கழித்தால், நூற்றுக்கு பதினைந்து வீதமானவர்கள்தான் தமிழ் நிகழ்ச்சிகளை விரும்புபவர்களாகக் கொள்ளலாம் ஆகவே, ஒலிபரப்பு நேரமும் இந்த விகிதாசாரப்படிதான பகிர்ந்து விடப்படுகிறது. அப்படியிருந்தும் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு, பொதுவாகப் பார்க்கப்போனால், எவ்வளவு முடியுமோ அவ்வளவு கூடுதலாக நேரம் பெற்று, அதற்குள், நேயர்களின் எல்லாவித சுவைகளையும் திருப்தி செய்யக்கூடியதாய் நிர்வாகசபையிலுள்ள நாங்கள் இப்போது ஒழுங்கு செய்து வருகிறோம். அடுத்த மாதமாகிய பெப்ரவரியில் ஏற்படுத்தியிருக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால் எத்தகைய முன்னேற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது ஒருவாறு புலனாகும் முன்னோட்டமாக, அந்த நிகழ்ச்சிகளைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

எல்லாமாக அடுத்தமாதம் 16 கச்சேரி நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் வாய்ப்பாட்டு, வயலின் சோலோ, வீணைக்கச்சேரி, புல்லாங்குழல், நாகஸ்வரம், வாத்ய கோஷ்டி, ஆகிய சகல அம்சங்களும் இருக்கத்தக்கதாய் ஒழுங்கு செய்திருக்கிறோம். இசைத்தட்டு நிகழ்ச்சிகளைச் சிறிது குறைத்து பேச்சு நிகழ்ச்சிகளைக் கூட்டியிருக்கிறோம். 12 பேச்சுக்களும், பெண்களுக்குப் பிரத்தியேகமாக ஒன்றும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பேச்சுக்களும் பலவிதமான விஷயங்களைப்பற்றியன. "எனது தொழில்" என்ற ஒரு புதிய தொடரில், பல துறைகளில்தொழில் பார்ப்பவர்களைக்கொண்டு ஒவ்வொரு மாதமும் பேச ஏற்பாடு செய்திருக்கிறோம். இவற்றை விட பலமாலமாக நேயர்கள் வற்புறுத்தி வந்த "நமது தபால்பெட்டி" என்ற நிகழ்ச்சியும் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையாக சேர்த்திருக்கிறோம் இதில், நேயர்களின் அபிப்பிராயங்களும் கருத்துக்களும் அவ்வப்போது கவனித்துப் பதில் தெரிவிக்கப்படும். மற்றும், இப்போதுள்ள வழக்கமான நிகழ்ச்சிகளாகிய, சிறுவர் பகுதி, புத்திமண்டலம், 'விவேக சக்கரம்" ஆகியவையும், முஸ்லிம் தமிழ்ப்பதம் கச்சேரியும், திருக்குர்ஆன பிரசங்கமும் இருக்கின்றன. அடுத்த மாதம் நபிகள் நாயகம் ஜனனதினத்துக்கு விசேஷ பேச்சும் இசை நிகழ்ச்சியும் ஒழுங்கு செய்திருக்கிறோம்.

மற்றொரு புதிய நிகழ்ச்சி சங்கீத ரஸிகர்களுக்கெல்லாம் மகிழ்ச்சிதரக் கூடிய ஒருஇசைத்தொடர். கர்நாடக சங்கீதத்தில் காணப்படும் சில ராகங்களையும், மற்றும் அம்சங்களையும் எடுத்து அவற்றை விளக்கும் இசை நிகழ்ச்சி ஒன்று ஒவ்வொரு மாதமும் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறோம் இதில் ராக லக்ஷணம் முதலியன விளக்கப்படுவதுடன், அதற்குரிய இசையும் ஒலிபரப்பப்படும். இசைத ரசிகர்களுக்கு வழக்கம்போல புதன்கிழமை மாலைவேளையில், நேயர் விருப்ப நிகழ்ச்சி இருக்கிறது.

இங்ஙனமாக, ரேடியோ நேயர்களின் தேவைகளையும் சுவைகளையும் அனுசரித்து, கொழும்பு நிலையம் இடங்கொடுக்கக்கூடிய அளவில் எங்களாலான சில புதிய மாறுதல்களும் திருத்தங்களும் செய்திருக்கின்றோம். தனி ஒலிபரப்பு யந்திரம் மாறி, விரைவிலே இரண்டு நிகழ்ச்சிகள் ஒரே சமயத்தில் ஒலிபரப்பக்கூடிய யந்திரம ஸ்தாபிக்கப்பட்டதும், நேயர்களுக்கெல்லாம் பலமணி நேரத் தமிழ் நிகழ்ச்சிகளும், இன்னும் பல புதிய அம்சங்களும் வழங்கப்படலாம், இன்னும் சிலகாலத்தில், ரேடியோ நிலையம் புதிய முறையில் ஸ்தாபிக்கப்பட இருக்கிறது. அதற்கிடையில், நேயர்கள் தமக்கு நியாயமானவை என்று காணப்படும் குறைபாடுகளை எமக்கு அறிவித்தால் சாத்தியமானவற்றை நிவிர்த்தி செய்யக் காத்திருக்கிறோம். அத்துடன், குறைகளை மாத்திரம் எடுத்துச் சொல்லாது. நீங்கள் ரஸிக்கத்தக்கதாயிருக்கும் நிகழ்ச்சிகளையும் எமக்கெழுதி உற்சாகப் படுத்துமாறும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(வரும்)

# விவாகம்

### குணவர்த்தனம் — பொன்னம்மா

பருத்தித்துறை, மேலைப்புலோலி 'குணவாசா"வில் இருக்கும் ஸ்ரீ T. S. கார்த்திகேசு அவர்களின் ஏகபுத்திரன் திருவளர் செல்வன் குணவர்த்தனத்திற்கும், மேலைப் புலோலி ஸ்ரீ K. V. கந்தையா அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி பொன்னம்மாளுக்கும் சென்ற 6-2-47 வியாழக்கிழமை இரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விநாயக முதலியார் தெருவிலுள்ள மணமகள் இல்லத்தில், விவாகம் சிறப்பாக பலசுற்றமித்திரர் சமுகத்தில் நிகழ்ந்தேறியது. தம்பதிகள் சகல ஐசுவரியங்களும் பெற்றுவாழபுலோலிப் பசுபதீஸ்வரன திருவருள் முன்னிற்பதாக. —கடித

•

### முத்துலிங்கம் — அன்னலட்சுமி

வண் கிழக்கு திரு. சுப்பையா அவர்களின் புதல்வரும், இச்சைவப்பிரகாச யந்திரசாலையிற் கடமையாற்றி வருபவருமாகிய திரு முத்துலிங்கமவர்களுக்கும், கந்தரோடை, திரு தில்லையம்பலமவர்களின் புதல்வி திருவளர் செல்வி அன்னலட்சுமியம்மாளுக்கும், சென்ற தை மாசம் உசுடு (6-2-47) வியாழக்கிழமை யிரவு எட்டரை மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மணமகளில்லத்தில் விவாகம் இனிது நிறைவேறியது மணமக்கள் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழ்வண்ணம் பரமேசுவரன் திருவருள் முன்னிற்பதாக.

## பரிசு ரூ. 1000 00

### சாதாரண அறிவுப்போட்டி நிர் 2

முடிவுதேதி 5—3—47

சரியானவிடை சென்ரல் பாங்கியில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது விடையும் பரிசு பெற்றவர் ஜாபிதாவும் 12-3-47 வீரகேசரியில் வெளிவரும். விபரங்கட்கும், இலவசக் கூப்பன்கட்கும் "Leon Vil'a" Bolawatta, Dankolluwa என்னும் விலாசத்துக்கு எழுதவும்.

Mis 326 18—21

### தானவரவு

மேலைப்புலோலிச் சைவவித்தியாசாலை சைவபாலிகா பாடசாலை யென்னும் வித்தியா தாபனங்களின் அதிபராயுள்ள திரு. ஆ. சி நாகலிங்க மவர்களின் இரண்டாம் புதல்வியும், தவ்வூர் திரு. ப. கணேசபிள்ளை யவர்களின் பிரிய பத்தினியுமாகிய ஸ்ரீமதி. சிவபாக்கியத்தின் அபரக்கிரியைப்போது, யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 சதம் 1 பெற்றும்.

மனேஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## துணைவர் வரு படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

மக்கள் வானவர்க் கருந்துயர் புரியும்வல் லவுணர்
தொக்க வீரமா மகேந்திரப் பெருவளந் தொலையச்
செக்கர் நூபுரப் புட்பரா கத்திபாற் சிறப்பாற்
றக்க வீரமா மகேந்திரன் வந்தவ தரித்தான்.

மனிதர்கட்கும் தேவர்கட்கும் சகித்தற்கரிய துன்பத்தைச் செய்பவர்களாகிய வலிய அசுரர்கள் செறிந்துள்ள வீரமா மகேந்திரபுரியிலுள்ள சிறந்த செல்வம் முழுவதும் ஒழியும்வண்ணம், செவ்வி, சிலம்பினின்றும் தெறித்த புட்பராகமணியில் தோன்றிய புட்பராக வல்லியென்னுஞ் சத்தி பிடத்துச் சீரோடு தகுதியும் அமைந்த வீரமா மகேந்திரர் என்னும் வீரர் வந்தவதரித்தார் என்பது கருத்து.

குல்வுருபை மக்கள் என்பதோடும் சேர்த்துக் கொள்க. தொலைய அவதரித்தானென முடிக்க; இங்கே சிறப்பால் என்பதற்கு மூன்றும்வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருள் கொடுத்துச் சிறப்போடு எனப் பொருள் கொள்ளப்பட்டது; "உடற்பிறப்பாற் சூருள்வலிபோம்" என்பதுபோல்; வீரமா மகேந்திரம் சூரபன்மனுடைய அரசிருக்கையாகும்; இந்த வீரருடைய பெயர் வீரமா மகேந்திரன்; அப்பட்டினத்தின் பெயரும் இவ்வீரரின் நாமமும் கொண்டுள்ள சொல்லொற்றுமையோடு இரு பெயர்களுக்கு முள்ள தொடர்பையும் எடுத்துக் காட்டவேண்டி ஆசாரியசுவாமிகள "வீரமா மகேந்திரப் பெருவளந் தொலைய .... ... ... .... வீரமா மகேந்திரன் வந்தவதரித்தான்" எனக் கூறினர்போலும். வீரமாமகேந்திரர் தமது சகோதரர்களாகிய வீரவாகுதேவர் முதலாம் வீரர்கட்குத் துணையாக நின்று மகேந்திரபுரியிற் சிலபாகத்தை அழிவுசெய்த வரலாறு பின்ன யுத்தகாண்டத்திற் கூறப்படும். (27)

ஆத வத்தனிக் கடவுளும் வடவையா ரழலுஞ்
சீத ளப்புது மதியமும் வெள்குறத் திகழ்கோ
மேத கத்தமர் பாவைபால் விண்ணவர் புரியும்
மாத வத்தினுல் வீரமா மகேச்சுரன் வந்தான்.

சூரியனாகிய ஒப்பற்ற தேவனும் வடவாமுகாக்கினியும் தண்மையோடு கூடிய பூரண சந்திரனும் வெட்கமுறும்படி ஒளிரும் கோமேதக மணியிற் பிறந்த சத்தியிடத்து, தேவர்கள் செய்துள்ள அருந்தவங் காரணமாக வீரமாமகேச்சுர ரென்பவர் வந்து தோன்றினு ரென்பது கருத்து,

சூரியனுடைய ஒளியும், வடவாக்கினியின் நிறமும், பூரண சந்திரனுடைய தண்மையும் வட்டாகார வடிவும் பொருந்திய மணியென்பார் ஆதவத் தனிக் கடவுளும் வடவரை யழலும சீதளப் புதுமதியமும் வெள்குறத் திகழ் கோமேதகம என்றார்; சந்திரன் முதலாம் கிரகங்களும் நட்சத்திரங்களும் ஏனைய வானசோதிகளும் இராக்காலத்திற் செய்யும் ஒளியைக் காட்டிலும் பகற்காலத்திற் சூரியன் தனியேனின்று செய்யும்ஒளி ஒப்புயர்வற்றதாதலின் ஆதவத்தனிக்கடவுள் என்றார்; தனி - ஒப்பற்ற. வாளாபுதுமதியமெனக் கூறின் பிறைச்சந்திர னெனப் பொருள் கொள்ளலுங் கூடுமாதலின், அங்ஙனங் கூறாது சீதளம் என்ற அடைகொடுத்துக் கூறப்பட்டது; பிறைச்சந்திரனுக்குச் சீதள மில்லையோ வெனின், உண்டு: ஆனாற் சோடச கலைகளோடுங் கூடியதாகிய பூரணசந்திரனிடத்துள்ள சீதளம அதிகமாதலின் அதனையே கொள்க புதுமதியம் பதினாறு கலைகளும் வந்து நிரம்பப் பூரண அழகைத்தரும மதியம்; கோமேதகத்தமர் பாவை - கோமேதக வல்லி, அசுரரை வதைத்துத் தேவரைக் காக்குங் கருமத்தில் முருகக்கடவுட்கும் தம் சகோதரர்கட்கும் துணையாக நின்று அசுரருடன் பொருத வீரராதலின் "விண்ணவர் புரியும் மாதவத்தினுல்" என்றார். (28)

தானமா நிலத் தேவர்கண் மகிழ்வுறத் தருவ
ரான பேரெலா முடிவுற வறந்தலை யெடுப்பக்
கானல் சேர்வயி டூரிய மின்னிடைக் கழற்கான்
மான வீரமா புரந்தர னென்பவன் வந்தான்.

பெரிய விண்ணுலகத்தாராகிய தேவர்கள் மகிழ்ச்சியுறவும் அசுரராயுள்ளாரனைவரும் அழிந்தொழியவும் (அதனுல்) சகல தருமங்களும் ஓங்கவும் ஒளி பொருந்திய வைடூரிய ரத்தினத்துதித்த சத்தியிடத்து வீரக்கழலையணிந்த காலையுடைய, அபிமானத்தோடு கூடிய வீரமாபுரந்தர ரென்பவர் வந்து தோன்றினுரென்பது கருத்து வயிடூரிய மின்னிடை - வைடூரியவல்லியிடத்து

[மாதானநிலம் - பெரிய தேவருலகம்: அசுரராற் குன்றிக் கிடந்த அறம் அவர் முடிவுற்றமையால் தலையெடுப்ப எனக் கொள்க. கானல் - ஒளி.] (29)

## சென்னையில் நெருக்கடி

சென்னையில் ஸ்ரீ ஜாத் பிரகாசத்தின் மந்திரசபையில் ஓர் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ பிரகாசம் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்றும், சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக இன்னொருவரைத் தாம் தெரிவதற்கு அநுமதி தரல் வேண்டும் என்றும், சட்டசபைக் காங்கிரஸ் வாதிகளில் மிகப் பெரும்பாலார் காங்கிரஸ் அதிகார பீடத்துக்கு அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீ பிரகாசத்துக்கு விரோதமாக நிற்பவர்களில், மலையாள, ஆந்திர, தமிழ் அங்கத்தவர்கள் சேர்ந்துள்ளனர் என்று தெரிகிறது. ஸ்ரீ பிரகாசத்தை நீக்கி, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரைப் பிரதம மந்திரியாக்கவேண்டும் என்பதே இவர்களது வாதம். ஸ்ரீ ஜாத் பிரகாசம், உத்தியோகார்த்தமாக டெல்லிக்குச் சென்றுள்ளார். அவர் சென்னைக்கு மீண்டதும், இவ் விஷயமாக ஓர் முடிவு செய்யப்படும்.

# வ

பண்டிதர்

ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

## அறுபதாமாண்டு நிறைவு விழா நிதி

இந் நிதிக்குப் பணமுதவுவோரின் பெயர், விலாசம், பணத் தொகை முதலியன:-

திருவாளர்கள்:

| | ரூ. | ச. |
|---|---|---|
| முன்கணக்குப்படி | 1048 | 50 |
| M சிற்றம்பலம், ஏழாலை, சுன்னுகம் | 5 | 00 |
| பண்டிதரின் மாணவி, ஆனந்தவாசம், நீராவியடி | 10 | 00 |
| K. கைலாசபிள்ளை, மண்டைதீவு | 5 | 00 |
| சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி | 10 | 00 |
| A. R. ஷண்முகரத்தினம், கோப்பாய் | 5 | 00 |
| சி. கனகரத்தினம்பிள்ளை, கோல்லம் | 10 | 00 |
| ஆக | 1093 | 50 |

மேற்படி பண்டிதரவர்களின் மாணுக்கர்கள் அபிமானிகளாயுள்ளாரனைவரும் இந் நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்ற பணம் உதவுக: மேலும் பணம் உதவும் அன்பர்கள் தம் பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி மேற்படி நிதித் தனுதிகாரியவர்கள் விலாசத்திற்கனுப்புக.

கா. கந்தையா, தலைவர். க. சி. சுப்பிரமணியம், காரியதரிசி. அ. கனகசபாபதி. தனுதிகாரி,

ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை, வண்ணூர்பண்ணை,

Mis 305 17-1-47

விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

9-2-47-ல் ஷை சபை திருவாக சபைக்கூட்டம் பின்வருந் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

1 சைவசமயக் கொள்கைகளுக்குப் பாதகமான கருத்தமைந்த நூல்களை இலங்கையிலுள்ள பாடசாலைகளில் பாடப்புத்தகங்களாகப் பாவிக்கவொண்ணுதென இச்சபை கல்வியதிகாரிகளையும் பாடசாலை முகாமைக்காரர்களையும் ஆசிரியர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றது.

2 இப்பொழுது S. S. C. வகுப்புத் தமிழ்ப்பாடப் புத்தகங்களுள் ஒன்றாகிய 'பாண்டவர்கதை' என்னும் நூலில் சில வரலாறுகள் பரம்பரையாகவுள்ள பாரதக்கதைக்கு முரணுக எழுதப்பட்டிருக்கின்றபடியாலும் அந்நூல் தமிழ் உலைஞர் உள்ளத்தில் பாரதம் என்னும் சிறந்த இதிகாசத்தின்கண் துவேஷத்தை யுண்டாக்குந்தன்மை வாய்ந்ததாகையினுலும் அதனை நீக்கிப் பிறிதொரு நூலை அதற்குப் பதிலாக ஷை பரீட்சைக்குக் குறிக்கும் வண்ணம் இச்சபை வித்தியாகர்த்தரைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

3 புத்தூரைச் சேர்ந்த நவக்கிரியென்னும் கிராமத்திலுள்ள சைவப் பிள்ளைகள் கல்வி பயில்வதற்கு அங்கு ஒரு சைவப்பள்ளிக்கூட மில்லாதபடியால் ஓர் அரசினர்பாடசாலையை நிறுவும்வண்ணம் கல்வி மந்திரியாரையும் காங்கேசன் துறைப் பிரதிநிதியையும் இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது

4 இந்துக்களுக்குத் தீபாவலி ஒரு முக்கிய புண்ணியதினமாகையினுல் அத்தினத்தை ஓர் பகிரங்க விடுமுறை நாளாகக் கொள்ளும்வண்ணம் இச்சபை உள்நாட்டு மந்திரியாரைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

5 கதிர்காம யாத்திரை வாசிகளின் வசதிக்காக திசமகாராமைக்கும் கதிர்காமத்துக்கும் இடையிலுள்ள பாதையையும் கதிர்காமத்துக்கும் செல்வக் கதிர்காமத்துக்கும் இடையிலுள்ள பாதையையும் திருத்தியமைக்கும்படி இச்சபை போக்குவரத்து மந்திரியாரைக் கேட்கின்றது.

## காலநிலை

இக்காட்களில் வெயிலும் பனியும் அதிகம்; அரிவிவெட்டுதல் பலவிடங்களிலே தொடங்கிவிட்டது; ஊரில் காய்ச்சல், தடிமல் முதலிய சில நோய்கள் பரவியுள்ளன; அதிக பனிபோடும் வெயிலோடுங் கூடிய இந்த வேளையில் மக்களாயுள்ளார் இயன்றவரையிற் சுகாதாரத்தைப் பேணி நடப்பது நன்றும். வீட்டு வளவுகளிலுள்ள செடிகள் பற்றைகளை வெட்டித் தறித்தேனும் புதைத்தேனும் வீட்டுக்கொல்லையைச் சுத்தப்படுத்துதல், கிணறுகளை வற்ற இறைத்தல் முதலியவற்றைச் செய்துவிடுதல் வேண்டும்; இலகுவிற் சீரணிக்கக் கூடிய உணவை யுண்ணுதல், அதிக நேரம் பயிராதொழிதல், பனியிலும் வெயிலிலும் சஞ்சரியாமை, பகற்காலத்தில் உறங்காமை, இராக்காலத்தில் அதிகநேரம் நித்திரை விழியாமை, அதிக சிரமந்தரும் வேலையைச் செய்யாமை, கிரமமான ஸ்நானம் போசனம் வெந்நீர்ப்பானம் முதலியவற்றை மக்கள் கைக்கொண்டொழுகுதல் தேகசுகத்திற் கேதுவாகும்.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் மகாசிவராத்திரி

மேற்படி கல்லூரி மண்டபத்தில் சிவராத்திரி விரத புண்ணிய தினமாகிய நாளை இரவு 9 மணி தொடக்கம் நான்கு யாமமும் பூசை, தேவார பாராயணம், பிரசங்கம், புராணபடனம் முதலியன வழக்கம்போற் கிரமமாக நடைபெறுமெனவும், பெண்பாலாருக்குப் பிரத்தியேகமான இடம் உதவப்படுமெனவும் தெரிவிக்கப்படலாயிற்று.

## மனேஜர்

வண்ணூர்பண்ணை கிழக்கு திரு. S. P. கந்தையா அவர்கள் (F. I., S. A.) இப்பொழுது இச் சைவப்பிரகாசயந்திரசாலை, இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களாகிய இவற்றின் மனேஜராக, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் நியமிக்கப்பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Mis 246 20-11-46—20-11-17 (தி)



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3 47)

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்



## கந்தசாமி வைத்தியர்

### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)



## India Super Tyres and Tubes

### இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்

கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந் உ யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால் தேவையானதற்கு இப்பொழுதே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

C. S. Nadarajah Chetty,
41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47



## இந்துசாதனம்

### ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள் ரூ. ச. | வெளியூர். ரூ. ச. | மலாய்நாட்டுக்கு ரூ ச |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.



## NEW IRON SAFES FOR SALE

### புதிய இரும்புப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele { Phone 68
grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12-46—12-3-47


## நமது சமயம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கூர்ந்துணர்ந்தவர்கள் என் கருத்தோடு முற்றும் உடன்படுவார்கள். இன்று சைவ இளைஞர் மகாநாடு நடைபெறுகின்றது. இவ்வாறேசைவ மங்கையர் மகாநாடும் நடைபெறுகின்றது. இவ்வகை மகாநாடுகள் புதுமுறைகளல்லவா? இளைஞர்கள் மாணவர்களாயிருந்து கற்கவேண்டியவராயிருக்க, இவர்கள் மகாநாடு கூடி, கருத்துக்களை வெளியிட்டுச் சமய இயக்கத்தை நெறிப்படுத்துவது பண்டைக்காலத்தில்இல்லை. இப்பொழுதுதான் ஏற்பட்டுள்ளது. சைவ மங்கையர்களும் மகாநாடுகளில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து. சைவ சமய முன்னேற்றத்தில் பங்குகொள்ளுதல் இப்பொழுது சில ஆண்டுகளாகத்தான் நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு நிறைவுவிழாவின் நிகழ்ச்சி முறையின் இறுதியில், 'அருகாமையிலுள்ள சேரிகளில் சமாஜத்தினர் 24-12-46ல் தொண்டு செய்வர் எனக் காணப்படுகிறது. இதுவும் சமய முன்னேற்றத்திற்குரிய ஒரு புது வழியாக நமது சமாஜத்தாரால் கொள்ளப்பட்டதாகும்.

மேற்சுட்டியபடி சைவசமயத்தின் க்ஷீணநிலையை ஒருவாறு உணர்ந்து அதற்கு உரம் கொடுக்கும் பரிகாரச் செயல்களைச் சமாஜம் செய்துவந்தபோதிலும், தற்காலத்து நமது சமயத்தை எதிரிட்டுநிற்கும் சக்திகளனைத்தையும் தெரிந்துகொண்டோமென்று எண்ணுவதற்கில்லை! இவையனைத்தையும் தெரிந்து கொண்டாலன்றி நாம் மேற்கொள்ளும் பரிகார முயற்சிகளும் வேண்டிய அளவு பயன்படமாட்டா. சைவசமயமும் நாளுக்கு நாள் மெலிந்துகொண்டே செல்லும். ஆதலால் இப்பொழுது இருக்கும் சமயநிலையை நாம் நன்றாக உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். முதலாவதாக நமது இளைஞர்களை எடுத்துக்கொள்வோம். அவர்களுடைய மனப்போக்கு முற்றும் மாறிவிட்டது, சமயம் என்ற சொல்கூட அவர்களுக்கு அருவருப்பைத் தருவதாக உள்ளது. தெய்வபக்தியும் விசுவாசமும் நாளுக்குநாள் குறைந்து வருகிறது என்றுதான் கூறவேண்டும். அவர்கள்மீது பழிசுமத்துவது தகாதென்று தோன்றுகிறது. ஒருகாலத்தில் நம்மவர்கள் புராணக் கதைகள் பலவற்றை நம்பி வந்தனர். அவற்றின்மீது கட்டப்பெற்ற சமயங்களைப் பின்பற்றி ஒழுகி வந்தனர். ஆனால் இப்பொழுதுள்ள நம் சந்ததியார்களுக்குப் புராணங்களை நம்புவதில் மனம் ஒருப்படவில்லை, கிரீஸ் தேசத்தில் 'மித்ஸ்' (myths) என்று சொல்லப்படுவன நமது புராணக் கதைகளை ஒத்தன. அவைகளை உண்மையென்று பூர்விக கிரேக்கர்கள் நம்பிவந்தனர். ஆனால் பிற்காலத்தில் அவற்றைச் செய்யுட்களில் அமைப்பதற்கேற்ற கற்பனைக் கதைகளெனமட்டும் கொண்டார்கள் அவ் அஸ்திவாரத்தின்மீதுதோன்றிய மதத்தில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். அதுபோன்ற ஒருநிலைமைதான் இப்பொழுது நம்நாட்டில் இருந்து வருகிறது. நம் இளைஞர்கள் பெரிய புராணத்தைக் கற்கின்றார்கள்; கற்ற அறிஞர்கள் வாயிலாகக் கேட்கின்றார்கள். ஆனால் அதன் இலக்கியச் சுவைதான் நம் இளைஞர்களுக்குப் பெரும் பயனாகத் தோன்றுகின்றதேயன்றி, அதன் [illegible] படுவார் [illegible] இல்லை (வரும்)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, February, 18, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org